கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி

**முன்னிலை :– திருமதி.என்.மாரீஸ்வரி, எம்.ஏ., எம்.எல்.,**

**கூடுதல் சார்பு நீதிபதி,**

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 9/2024</u>**

(CNR No. TNTL110000172024)

துரைச்சாமி --- வாதி

/ எதிர் /

சரஸ்வதி --- பிரதிவாதி

இந்த வழக்கு 04.10.2024 ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.A.அப்துல் மஜீத் அவர்களும், முன்னதாக, பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.வீரன் அவர்களும் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் வழங்கிய பின்னரும் தாக்கல் செய்யாத காரணத்தினால், பிரதிவாதியைப் பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

பிராது தொகை விபரத்தில் கண்ட ரூ.5,46,270/–ம், அதில் அசல் தொகை ரூ.5,00,000/–க்கு பிராது தாக்கல் செய்த நாள் முதல் 12% பின்வட்டி செலுத்தக் கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும், வாதி இந்த வழக்கை உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 7 விதி 1–ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. வழக்குரையின் சுருக்கம் –</u>**

உபயவாதிகள் இருவருக்கும் உள்ள நல்ல பழக்கத்தின் அடிப்படையில், பிரதிவாதி 26.03.2023 ல் வாதியை நேரில் சந்தித்து

ரூ.5,00,000/- பணம் தேவைப்படுவதாக கூறியதன் அடிப்படையில், 26.03.2023-ல் ரூ.5,00,000/- ரொக்கம் கடனாக பிரதிவாதி பெற்றுக்கொண்டார். வாதி, பிரதிவாதி கொடுத்த காசோலையை 26.09.2023-ல் வாதி கணக்கு வைத்துள்ள கீழப்பாவூர் கிளை, சென்ட்ரல் வங்கியில் வசூலுக்கு அனுப்பினார். ஆனால், மேற்படி காசோலையானது வசூல் ஆகாமல் Exceeds Arrangement என்ற மேற்குறிப்புடன் 30.09.2023 ல் திரும்பி வந்துவிட்டது. மேற்படி செக் திரும்பிய விபரத்தை வாதியின் வங்கி வாதிக்கு மெமோ மூலம் தெரிவித்தார்கள்.

(ii) வாதி, பிரதிவாதியை 01.10.2023 ல் நேரில் சந்தித்து பிரதிவாதி கொடுத்த காசோலை பணம் வசூல் ஆகாமல் திரும்பிவிட்டது என்று கூறி கடன் தொகை ரூ.5,00,000/-த்தை திரும்ப செலுத்தும்படி கேட்டார். அதற்கு பிரதிவாதி 15 நாட்களுக்குள் கடன் தொகையை செலுத்திவிடுவதாக உறுதிகூறினார். ஆனால், பிரதிவாதி அவ்வாறு தொகை செலுத்திப் போகவில்லை. மீண்டும் வாதி, பிரதிவாதியை 16.10.2023 ல் கடன் தொகை ரூ.5,00,000/-த்தை செலுத்தும்படி கேட்டதற்கு இன்னும் 15 நாட்கள் கால அவகாசத்திற்குள் செலுத்திவிடுவதாக உறுதி கூறினார். ஆனால், பிரதிவாதி கூறியபடி வாதிக்கு செலுத்திப்போகவில்லை. ஆகவே, வாதி, பிரதிவாதிக்கு 16.11.2023 ல் அறிவிப்பு ஒன்றினை அனுப்பி மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138A ன் படி குற்றம் என்றும், பிரதிவாதி நம்பிக்கை மோசடி செய்துள்ளார் என்றும், ஆகவே, கடன் தொகை ரூ.5,00,000/-ம் பணத்தை பிரதிவாதி கொடுத்த காசோலை திரும்பி வந்ததால், அதற்குரிய Service Charges ரூ.270/-ஐயும் சேர்த்து செலுத்த வேண்டும் என கோரி ஒரு அறிவிப்பை அனுப்பினார். அத்தோடு 26.06.2023 முதல் வட்டியும் கணக்கிட்டு வாதியிடம் செலுத்திப் போக வேண்டும் என வாதி கோரியிருந்தார். பிரதிவாதி, வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பினை 21.11.2023 ல் பெற்றுக்கொண்டார். ஆனால், பிரதிவாதி யாதொரு பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகையையும் செலுத்தாததால், இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இந்த வழக்கில் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்த நிலையில், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் பிரதிவாதியைப் பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டுள்ளார்.

4. இந்த வழக்கில், வாதி துரைச்சாமி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இந்த வழக்கில் வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

**7. தீர்வு –**

வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், உபயவாதிகள் இருவருக்கும் உள்ள நல்ல பழக்கத்தின் அடிப்படையில், பிரதிவாதி 26.03.2023 ல் வாதியை நேரில் சந்தித்து ரூ.5,00,000/– பணம் தேவைப்படுவதாக கூறியதன் அடிப்படையில், 26.03.2023-ல் ரூ.5,00,000/- ரொக்கம் கடனாக பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்றும், மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் வகைக்கு பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கீழப்பாவூர் கிளை சேமிப்பு கணக்கு எண்.10955950328 உள்ள காசோலை எண்.259865 என்ற காசோலையை ரூ.5,00,000/-த்திற்கு தொகை நிரப்பி 26.09.2023 ம் தேதியிட்டு பின்தேதியிட்டு பிரதிவாதி செக்கின் முன்புறமும், செக்கின் பின்புறமும் பிரதிவாதி கையெழுத்திட்டு வாதியிடம் கொடுத்து அந்த தேதியில் பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு கூறி ரூ.5,00,000/-ம் பணத்தை ரொக்கமாக பெற்றுக்கொண்டு சென்றார் என்றும், மேற்படி காசோலை வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி, பிரதிவாதி கொடுத்த காசோலையை 26.09.2023 ல் வாதி கணக்கு வைத்துள்ள கீழப்பாவூர் கிளை, சென்ட்ரல் வங்கியில் வசூலுக்கு அனுப்பினார் என்றும், ஆனால், மேற்படி காசோலையானது வசூல் ஆகாமல் Exceeds Arrangement என்று காரணம் கூறி மதிப்பிழந்ததை சுட்டிக்காட்டி வாதி வங்கி வாதிக்கு வழங்கிய மெமோ வா.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி, பிரதிவாதியை 01.10.2023 ல் நேரில் சந்தித்து பிரதிவாதி கொடுத்த காசோலை பணம் வசூல் ஆகாமல் திரும்பிவிட்டது என்று கூறி கடன் தொகை ரூ.5,00,000/-த்தை திரும்ப செலுத்தும்படி கேட்டார் என்றும், அதற்கு பிரதிவாதி 15 நாட்களுக்குள்

கடன் தொகையை செலுத்திவிடுவதாக உறுதி கூறினார் என்றும், ஆனால், பிரதிவாதி தொகை செலுத்தாததால், 16.11.2023 ல் அறிவிப்பு ஒன்றினை அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பு மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3, 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை பிரதிவாதி 21.11.2023 ல் பெற்றுக்கொண்டு யாதொரு பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், எனவே, அசல் தொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்திப் போக கடமைப்பட்டுள்ளார் என்றும், இவ்வாறாக, வாதியின் வழக்கானது வா.சா.1 சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களின் படி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, வாதியின் வழக்கானது அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதம் செய்தார்.

8. இந்நிலையில், இந்நீதிமன்றமானது வா.சா.ஆ.1 ஐ பார்வையிட்டபோது, வாதி, பிரதிவாதியிடம் ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்த காசோலை என்பதும், வா.சா.ஆ.2 ஐ பார்வையிட்டபொழுது, மேற்படி காசோலையை வாதி வங்கியில் 30.09.2023 ல் கொடுத்தபொழுது காசோலை பணமாகாமல் Exceed Arrangement என்று காரணம் கூறி மதிப்பிழந்ததை சுட்டிக்காட்டி வாதி வங்கி வாதிக்கு வழங்கிய மெமோ என்பதும், வா.சா.ஆ.3, 4 ஐ பார்வையிட்டபொழுது, மேற்படி தொகை ரூ.5,00,000/–ஐ பிரதிவாதி நாளது தேதி வரை செலுத்தாத காரணத்தினால், 16.11.2023 ல் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

9. மேலும், வாதியின் கூற்றை மறுத்து நிரூபணம் செய்யும் பொறுப்பு பிரதிவாதியைச் சார்ந்ததாகும். இந்நிலையில், இந்நீதிமன்றத்தில் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்தபோதிலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், வழக்கு விபரங்களை நன்கு அறிந்து கொண்டு இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாமலும், வழக்குரை சங்கதிகளை மறுத்துரைக்கும் வகையில் பிரதிவாதி இருந்து வருவதாலும் வாதியின் வழக்கானது வா.சா.1 சாட்சியத்தின் வாயிலாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களின் மூலமாகவும் முதல் நோக்கு நிலையில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. மேலும், வாதியின் வழக்குரையை மறுத்துரைத்து பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை மேல்நடத்தாத காரணத்தினால், வாதியின் வழக்கானது உண்மையானது என்ற அனுமானத்தை வாதிக்கு ஆதரவாகவும், பிரதிவாதிக்கு எதிராகவும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(g)—ன்படி இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. மேலும், வாதி தனது பிராதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே தனது நிரூபண வாக்குமூலத்தில் தெரிவித்து, நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆவணங்களை தாக்கல் செய்துள்ள நிலையில், தாவா வழக்கு காசோலை தொடர்பான வழக்கு என்பதை இந்நீதிமன்றம் கருத்தில்கொண்டாலும், இதனை மறுத்தளிக்கும் வகையில், பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி எவ்வித ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை என்பதுடன், வாதியையும் குறுக்குவிசாரணை செய்யவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில்கொள்கிறது. மேலும், வாதி, பிரதிவாதியின் குறைபாட்டினை மிகைப்படுத்தி தனது வழக்கினை மெய்ப்பிக்கவில்லை என்பதைக் கருத்தில்கொண்டும், வாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் மூலம் தனது வழக்கினை மெய்ப்பித்துள்ளார் என்பது உறுதியாகிறது. எனவே, வாதிக்கு வழக்கில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டும், வாதிக்கு, பிரதிவாதி பிராது தொகை விபரத்தில் கண்ட ரூ.5,46,270/—ம், அதில் அசல் தொகை ரூ.5,00,000/—க்கு பிராது தேதி முதல் ஆண்டுக்கு 9% வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் நாள் வரை ஆண்டுக்கு 6% பின்வட்டியும் மற்றும் இவ்வழக்கின் செலவு தொகையும், தீர்ப்புரை தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் (அதாவது 24.12.2024—க்குள்) செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, கணினியில் விரிவாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் வருடம் பிப்ரவரி திங்கள் 27 ம் நாள் திறந்த வழக்கரங்கில் அவையறிய பகரப்பட்டது.

N MAREESWARI
Digitally signed by N MAREESWARI
Date: 2024.10.25 18:07:29 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி**

<u>வாதி தரப்பு சாட்சி –</u>

வா.சா. 1 – திரு. துரைச்சாமி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் –</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 26.03.2023 | 23.03.2023 ல் பிரதிவாதி, வாதியிடம் ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்த காசோலை – அசல் |
| வா.சா.ஆ. 2 | 30.09.2023 | மேற்படி காசோலையை வாதி வங்கியில் 30.09.2023 ல் கொடுத்தபொழுது காசோலை பணமாகாமல் Exceed Arrangement என்று காரணம் கூறி மதிப்பிழந்ததை சுட்டிக்காட்டி வாதி வங்கி வாதிக்கு வழங்கிய மெமோ – அசல் |
| வா.சா.ஆ. 3 | 16.11.2023 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ. 4 | 21.11.2023 | அஞ்சலக ஒப்புதல் அட்டை – அசல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> –

இல்லை

N MAREESWARI
Digitally signed by N MAREESWARI
Date: 2024.10.25 18:07:36 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி.**

-------------------------
கூ.சா.நீதிமன்றம், தென்காசி,
அசல் வழக்கு எண். 9/2024
**தீர்ப்புரை** ( Fair / Draft)
நாள் : 25.10. 2024
-------------------------